Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 17, 2021

செவ்வாய்க்கிழமை ஓகஸ்ட் 17, 2021 | ஒளி: 07 கதிர்: 76 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

7 அமைச்சுகள் கைமாறின;

## நாமலுக்கு கூடுதல் பொறுப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் அமைச்சரவையில், மற்றுமொரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## அடுத்த 'வெடிகுண்டு' மிகவும் மோசமானது



கொரோனா வைரஸின் கடுமையான திரிபாக டெல்டா மாறுபட்டிருக்கும் நிலையில், எதிர்காலத்தில் இன்னும் கடுமையான கொரோனா வைரஸ் விகாரமாக உருவாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளனவென ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். தொடர்ச்சி P2

## பேய் விரட்டி 10 பேர் தனிமை



தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி, வீடொன்றில் 'பேய் விரட்டும்' சடங்குகளை செய்த சாமியார் உள்ளிட்ட 10 பேர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அம்பாறை, மாயாதுன்ன பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2



விரல் துண்டை இழந்த அரசனதும், குழிக்குள் தள்ளிவிடப்பட்ட ஆலோசகரின் கதையையும் கூறினார்.

எல்லாம் நன்மைக்கே என மனதை தேற்றிக் கொண்டு, கிடைத்ததைக் கொண்டு சேவை செய்வேன்

வாழ்க்கையில் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்

# எதிர்பாராத மாற்றம்

அவ்விடத்துக்கு செல்லும் வரையிலும் எனக்கு எதுவுமே தெரியாது எனத் தெரிவித்த முன்னாள் சுகாதார அமைச்சரும், தற்போதைய போக்குவரத்து அமைச்சருமான பவித்ரா வன்னியாராச்சி, இவ்வாறானதொரு மாற்றம் ஏற்படுமென தான் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்றார்.

வாழ்க்கையில் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என மனதை தேற்றிக்கொண்டு, கிடைத்ததைக் கொண்டு சேவை செய்வேன் என்றார்.

நேற்று (16) அமைச்சரவை மாற்றத்தின் பின்னர், சுகாதார அமைச்சுக்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கு நன்றிகூறி, விடைபெற்றார். அதன்பின்னர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எதிர்பாராத தருணத்தில் மாற்றம் செய்யப்பட்டு தனக்கு இந்த அமைச்சு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தான் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்லும் வரை தனது அமைச்சுப் பதவியில் மாற்றம் வரும் என தான் அறிந்திருக்கவில்லை என்றார். தொடர்ச்சி P2

## இறுதியாக கடிதம் கொடுத்தோம்



கொரோனா வைரஸ் வியாபித்துச் செல்வதை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக மூடுமாறு தொடர்ந்தும் கோரிக்கைகளை விடுத்துவருவதாக தெரிவித்துள்ள இலங்கை வைத்தியர் சங்கம், இதுதொடர்பில் ஜனாதிபதிக்கு இறுதியாக கடந்த 11ஆம் திகதியன்று எழுத்துமூலம் அறிவித்தோம் என்றார். தொடர்ச்சி P2

## புலிகளுடன் தலிபான்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை

### பௌத்த பகுதிகளுக்கு ஆபத்து ஏற்படாது



தலிபான் ஒரு சுதந்திரமான விடுதலைப் படையாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (எல்.ரி.ரி.ஈ) எமக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்த தலிபான் செய்தித் தொடர்பாளரும் சர்வதேசப் பேச்சாளருமான சுஹெய்ல் சஹாப்தீன், தொடர்ச்சி P2

## கூட்டுத் தொழுகைக்கு தடை

பள்ளிவாயல்களில் கூட்டுத் தொழுகை, ஜும்ஆ மற்றும் ஏனைய கூட்டு செயற்பாடுகளுக்கு வக்பு சபையால் மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், சுகாதார வழிமுறைகளை பேணி தனிமையாக தொழுவதற்கு அதிக பட்சம் 25 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் எனவும் வக்பு சபை குறிப்பிட்டுள்ளது.




ஊடகத்துறையின் புதிய அமைச்சராக நியமிக்கப்பட்ட அமைச்சர் டலஸ் அழகபெரும, ஊடகத்துறை அமைச்சில், தனது கடமைகளை நேற்றைய தினமே பொறுப் பேற்றுக்கொண்டார். (படம்: ஊடகப்பிரிவு)

## இந்திய–இலங்கை இருதரப்பு உறவுகள் குறித்துப் பேச்சு



ஆ.ரமேஸ்.

கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராக பதவியேற்றுள்ள டொக்டர் செல்வி எஸ்.அதிராவை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நேற்று (16) சந்தித்தார்.

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், இந்திய உயர்ஸ்தானிகராலய செயலாளர் கிருஷ்ணபிரசாத், பிரஜாசக்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பரத் அருள்சாமி, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். தொடர்ச்சி P2

## இன்று மட்டும் சபை கூடும்



இந்த மாதத்தில் இன்று (17) மாத்திரம் பாராளுமன்ற சபை அமர்வை நடத்த நேற்று (16) இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தொடர்ச்சி P2

## மூன்றாவது அலையில் 19 கர்ப்பிணிகள் மரணம்

### கர்ப்பிணி வாரமும் அறிமுகம்



கொரோனா மூன்றாவது அலையில் 19 கர்ப்பிணிகள் மரணித்துள்ளனர் எனவும் இவர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை எனவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் டொக்டர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2

## முன்மாதிரியான இராஜாங்க அமைச்சர்




தனது இந்த மாத சம்பளத்தில் அரைவாசியை கொரோனா அறக்கட்டளை நிதியத்துக்கு வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ள வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, பல நெருக்கடிகளின் போது இந்நாட்டு மக்கள் நன்கொடைகளை வழங்கியுள்ளனர். எனவே, அதன் ஆரம்பமாக தான் இந்தப் பணியை ஆரம்பித்து வைக்கவுள்ளேன் என்றார். தொடர்ச்சி P2

## மலாலா கவலை



ஆப்கானிஸ்தான் முழுமையாக தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாக செய்திகள் வெளியானதன் பின்னர் டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ள மலாலா, "தலிபான் ஆதிக்கம் அதிர்ச்சியளிக்கிறது. பெண்கள், சிறுபான்மையினரை நினைத்து கவலை கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2



## பதிவுத் திருமணத்துக்கு மட்டுமே அனுமதி

திருமணப் பதிவுகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, திருமண நிகழ்வுகளுக்கு முழுமையாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார். தொடர்ச்சி P2

## 4/21 விவகாரம்: சிவப்பு பிடியாணை பிறப்பிப்பு

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பில் இன்னும் சிலரை கைது செய்வதற்காக, சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

தாக்குதலுடன் தொடர்புடைய எவரையும் சட்டத்திடமிருந்து தப்புவதற்கு இடமளிக்கப் போவதில்லை என்றார்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய 21 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த அமைச்சர், சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.



## மதில் விழுந்து இளைஞன் பலி

எஸ்.சசிகன், கு.சக்தி

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில், வீட்டு சுற்று மதில் வீழ்ந்ததில், பேரின்பராஜா பேனுஜன் (வயது 18) இளைஞன், சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞன், நேற்றுமுன்தினம், தனது இரவு உணவை முடித்து விட்டு வெளியில் சென்றுள்ளார். அவரது வீட்டுக்குப் பின்னால் உள்ள சுற்று மதில் உடைந்த நிலையில், கற்களுக்குள் சிக்குண்டு, இன்று (16) அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## அடுத்த 'வெடிகுண்டு' மிகவும் மோசமானது

தற்போதைய சூழ்நிலையில் அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் முக்கியமானவை என்றும், யாராவது வீட்டை விட்டு வெளியே வந்தால், கொரோனா தொற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் இராஜாங்க அமைச்சர் எச்சரித்தார்.

"இந்த நேரத்தில் பயணங்களை முடிந்தவரை கட்டுப்படுத்த வேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பேய் விரட்டி 10 பேர் தனிமை

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி, வீடொன்றில் 'பேய் விரட்டும்' சடங்குகளை செய்த சாமியார் உள்ளிட்ட 10 பேர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அம்பாறை, மாயாதுன்ன பிரதேசத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டதிலேயே இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களுக்கு பொலிஸார் பிணை வழங்கியுள்ளதோடு, சாமியார் உள்ளிட்ட 10 பேரும் பொதுச் சுகாதார பரிசோதகரால் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். 14 நாள்கள் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த பின்னர், இவர்கள் அனைவருக்கு எதிராகவும் அம்பாறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இந்திய–இலங்கை இருதரப்பு உறவுகள்....

இதன்போது, ஓகஸ்ட் 15ஆம் திகதி கொண்டாடப்பட்ட இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு வாழ்த்துகளை தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், புதிய நியமனத்துக்கான தனது வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார். அத்துடன், ஞாபகச் சின்னம் ஒன்றையும் வழங்கிவைத்தார்.

மத்திய, ஊவா மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் கல்வி அபிவிருத்தி உட்பட இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீட்டுத்திட்டம் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள், இலங்கை-இந்திய இருதரப்பு உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் வேலைதிட்டம் தொடர்பாகவும், மலையகத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டன.

## மூன்றாவது அலையில் 19 கர்ப்பிணிகள் மரணம்

எனவே, நாட்டிலுள்ள அனைத்துக் கர்ப்பிணிகளுக்கும் கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
தடுப்பூசியை ஏற்றுவதற்கான திகதியை, தாங்கள் வசிக்கும் பகுதிக்குப் பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரிகள் ஊடாக அறிந்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, கொரோனா தொற்று தற்போது தீவிரமடைந்து வருவதால், கர்ப்பிணிகள், அநாவசியமாக வீட்டைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.
இந்நிலையில், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என கொழும்பு காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் மகப்பேற்றியல் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் டொக்டர் சனத் லனரோல் தெரிவித்தார்.
கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு கடந்த மாதம் சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியதாகவும் நாட்டிலுள்ள சுமார் மூன்று இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் இன்னும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

## மலாலா கவலை

இந்நிலையில், "ஆப்கானிஸ்தான் தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது கவலையளிக்கிறது. இதனை அதிர்ச்சியுடன் கவனிக்கிறேன். அங்குள்ள பெண்கள், சிறுபான்மையினர், மனித உரிமை செயற்பாட்டாளர்களை நினைத்து கவலை கொள்கிறேன்.

உள்ளூர் தலைவர்கள், பிராந்திய தலைவர்கள், உலகத் தலைவர்கள் ஆப்கானில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள அவர், அங்கு மனிதாபிமான ரீதியிலான உதவிகளை உலக நாடுகள் செய்ய வேண்டும். அகதிகளையும் பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டும்" என்று டுவிட்டர் மூலம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யார் இந்த மலாலா?

பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலா யூசுப்சாய், பெண்களின் கல்விக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார். 15 வயதுச் சிறுமியாக இருந்த அவரை, 2012ஆம் ஆண்டு தலிபான் தீவிரவாதிகள் சுட்டனர். கழுத்தில் குண்டு பாய்ந்த நிலையில், அவர் உயிர் தப்பினார்

உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட போதிலும் தொடர்ந்தும் பெண் குழந்தைகளின் முன்னேற்றத்துக்காகக் குரல் கொடுத்தார் மலாலா. இதைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு அவருக்குக் கிடைத்தது. உலகிலேயே மிகவும் இளம் வயதில் நோபல் பரிசு பெறுபவர் என்ற பெருமைக்கும் மலாலா சொந்தக்காரர் ஆனார்.

# எதிர்பாராத மாற்றம்

எது எப்படியாயினும் வாழ்க்கையில் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து கதையொன்றைக் கூறிய அவர்,

" அரசனும் அவனது ஆலோசகரும் காட்டுவழியாக பயணம் செய்துகொண்டிருந்தனர். அப்போது அரசன் எய்த மூன்று அம்புகள் குறி தவறிவிட்டன. அதன்போது, என்றுமில்லாத வகையில் குறி தவறிவிட்டனவே ஏன்? எனக் அரசன் கேட்கையில், எல்லாம் நன்மைக்கே என? ஆலோசகர் பதிலளித்துள்ளார்.

பயணமும் தொடர்ந்தது. அப்போது அரசன், தன்னுடைய வாளை உருவியுள்ளார். அந்த வாள், தன்னுடைய கையின் சிறுவிரலில் பட்டுள்ளது. அதனால், அவ்விரலில் ஒருதுண்டு கீழே விழுந்துவிட்டது. இதுபற்றியும் ஆலோசகரிடம் அரசன் வினவியுள்ளார்.

அப்போதும் எல்லாம் நன்மைக்கே என, ஆலோசகர் பதிலளித்துள்ளார்.

கடுமையாக கோபம் கொண்ட அரசன், அந்த ஆலோசகரை, அங்கிருந்த பாரிய குழிக்குள் தள்ளிவிட்டு, தனது பயணப்பாதையை மாற்றிக்கொண்டு பயணித்துள்ளார்.

போய்கொண்டிருந்தபோது பலிபூஜை செய்வதற்காக ஒருவரே, அந்த காட்டில் இருந்தவர்கள் தேடிக்கொண்டிருந்தனர்.

அரசனோ, அவர்களிடம் வசமாகக் மாட்டிக்கொண்டார். அரசனை முழுமையாக நீராட்டி எடுத்துவந்தவர்கள், அங்கங்களை பரிசோதனை செய்துள்ளனர். பலி பூஜைக்கு முழுமையாக உடலமைப்பை கொண்டவர்களை மட்டுமே பயன்படுத்துவர். ஊனம் உள்ளவரை பலியெடுக்க மாட்டார்கள்.

அரசனின் விரல்களில் ஒரு துண்டு இன்மையால், பலி பூஜைக்கு அரசனை பயன்படுத்தாது விட்டுவிட்டனர். இதுதொடர்பில், அங்கிருந்தவர்களிடம் விசாரித்துள்ளார் அரசன். ஊனம் உள்ளவர்களை பலியெடுக்கமாட்டோம் என விளக்கமளித்துள்ளனர்.

அப்போதுதான், எல்லாம் நன்மைக்கே என ஆலோகர் கூறியது அரசனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதன்பின்னர், அந்த குழியைத் தேடிச்சென்று, அதிலிருந்து ஆலோசகரை மீட்டெடுத்தார் அரசன்.

> பலி பூஜைக்கு முழுமையாக உடலமைப்பை கொண்டவர்களை மட்டுமே பயன்படுத்துவர். ஊனம் உள்ளவரை பலியெடுக்க மாட்டார்கள்

குழியிலிருந்து வெளியேவந்த ஆலோசகர், என்னை குழிக்குள் நீங்கள் தள்ளியதும் நன்மைக்கே என்றார்.

அரசனோ ஏன்? என வினவியுள்ளார்.

நானும் உங்களுடன் வந்திருந்தால், அந்த பலி பூஜையில் உங்களுக்கு அடுத்தபடியாக என்னை பலியெடுத்திருப்பார்கள், நான் தப்பிக்கொண்டேன் என ஆலோசகர் விளக்கப்படுத்தியுள்ளார் என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, கதையை முடித்தார்.

எனவே, தனக்கு வழங்கப்பட்ட இந்த பதவி மாற்றமும் நன்மைக்கே எனக் கூறி சிரித்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, ஆனால் மனதில் சிறிய கவலையுள்ளது என்றார்.

## நாமலுக்கு கூடுதல் பொறுப்பு

அதனடிப்படையில், ஏழு அமைச்சர்களுக்கு கீழிருந்த விடயதானங்கள் அதிரடியாக மாற்றப்பட்டுள்ளன. அந்தடிப்படையில்,

01. ஜீ.எல்.பீரிஸ் - வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
02. தினேஸ் குணவர்தன - கல்வி அமைச்சர்
03. பவித்ரா வன்னியாரச்சி - போக்குவரத்து அமைச்சர்
04. கெஹெலிய ரம்புக்வெல்ல - சுகாதார அமைச்சர்
05. காமினி லொக்குகே - மின்சாரத்துறை அமைச்சர்
06. டளஸ் அழகப்பெரும - ஊடகத்துறை அமைச்சர்
07. நாமல் ராஜபக்ஷ - இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை அமைச்சகளுக்கு மேலதிகமாக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மேற்பார்வை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## இறுதியாக கடிதம் கொடுத்தோம்

ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரதிகள், துறைசார் அமைச்சர், சுகாதாரப் பிரிவினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என அச்சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# புலிகளுடன் தலிபான்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை

நாட்டின் சுதந்திரத்துக்காகவும் வெளிநாட்டு படைகளை எதிர்த்தும் கடந்த 20 வருட காலமாக போராடி வருகிறோம் என்றும் கூறினார்

எமது சகோதர பத்திரிகையான டெய்லி மிரருக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தோஹாவிலிருந்து சுருக்கமாக பேசுகையில் அவர், தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் பிரதான நகரங்களைக் கைப்பற்றிய போதும் தலைநகர் காபூலின் வாயில்களை அடைந்துள்ளனர்.

தலிபான்கள் மீண்டும் பலத்தைப் சக்திமிகு மாற்றத்துக்காக நாங்கள் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறோம் என்றார்.

ஆப்கானிஸ்தானின் பாமியன் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த உலகின் மிக உயரமான புத்தர் சிலை 2001ஆம் ஆண்டு மார்ச் மாதம் தலிபான்களால் அழிக்கப்பட்டது. இந்த புராதன காலத்து சிற்பத்தை அழித்தமைக்கு கண்டனம் தெரிவித்த நாடுகளில் இலங்கையும் அடங்கும்.

தலிபான்கள் மீண்டும் பலத்தைப் பெற்று இருப்பதால் பௌத்த பகுதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமோ என்ற பயம் பரவலாக ஏற்பட்டுள்ளது. தலிபான்கள் தலைமையிலான நிர்வாகத்தில் ஆப்கானிஸ்தானில் உள்ள பௌத்த பகுதிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்று வலியுறுத்திக் கூறுகிறேன். இது தொடர்பான எந்த கூற்றுக்களையும் நான் மறுக்கிறேன் என்றும் அவர் கூறினார்.

தலிபான்களை இலங்கை பயங்கரவாதிகளாகக் கருதக்கூடாது என்றும் அவர் கூறினார். நாங்கள் விடுதலைப் போராளிகள். உங்களுடைய முன்னோர்கள் உங்கள் நாட்டின் விடுதலைக்காக எப்படிப் போராடினார்களோ அப்படிப் போராடுபவர்கள். ஆனால், நாங்கள் விஷம பிரசாரம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் வெளியேற்றத்தை அடுத்து கிட்டத்தட்ட ஆப்கானிஸ்தானின் எல்லாப் பகுதிகளையும் சுமார் ஒரு வார காலத்தில் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

## முன்மாதிரியான இராஜாங்க...

"பொருளாதார நெருக்கடி, சுகாதார நெருக்கடி, சமூக நெருக்கடி என அனைத்தும் நெருக்கடியில் பயணிக்கின்றன. இந்த நிலைக்குப் பொறுப்பானவர்கள் யார்? சந்தேகநபர் யாரென்று எம்மால் கூற முடியாது" என தெரிவித்த அவர், "ஆனால், அரசாங்கம் என்ற ரீதியில் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து வருகிறோம்" என்றார்.

மாலை நேரங்களில் செய்திகளைப் பார்க்கும் போது, நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தத் துயரச் சம்பவங்கள் குறித்து விமர்சிப்பதாகத் தெரிவித்த அவர், ஆனால் இந்த துயரங்களுக்கு உதவிகள் அல்லது நன்கொடைகளை வழங்கி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க எவரும் முன்வருவதில்லை என்றார்.

> விமர்சகர்களாக மாத்திரம் இருந்துகொண்டு இந்தப் பிரச்சினை குறித்து ஆராயாமல், இந்தப் பிரச்சினைகளின் பங்குதாரர் என்ற ரீதியில் முகங்கொடுக்க வேண்டும்

எனவே, நாம் ஆலோசகர்கள், விமர்சகர்களாக மாத்திரம் இருந்துகொண்டு இந்தப் பிரச்சினை குறித்து ஆராயாமல், இந்தப் பிரச்சினைகளின் பங்குதாரர் என்ற ரீதியில் இவற்றுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்றார்.

## இன்று மட்டும் சபை கூடும்



"பாராளுமன்றத்தை ஒருநாள் நடத்தவதற்கு தாம் ஒத்துழைப்பு வழங்குவதாக எதிர்க்கட்சி தெரிவித்தாலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த போது, சபையைக் கூட்டுமாறு, இவர்களே நீதிமன்றம் சென்றவர்கள்" என அரசாங்க முதற்கோலாசானும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்குப் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த முறை நாம் பாராளுமன்றத்தை கூட்டுமாறு தெரிவித்த போதே, வேண்டாம் என்றவர்கள் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு, தற்போது தெரிவிப்பது வேடிக்கையாக உள்ளது என்றார்.

எதிர்க்கட்சியின் அடிமட்ட யோசனை என்னவென்பதை நாம் யோசிக்க வேண்டும். அன்று திறக்கச் சொன்னார்கள், இன்று மூடச் சொல்கிறார்கள்" எனத் தெரிவித்த அவர்,

"பொறுப்பின்றியே அவர்கள் செயற்பட்டனர். கடந்த காலரங்களில் கொரோனா பரவுவதற்கு உதவி செய்தவர்கள்தான் எதிர்க்கட்சியினர். ஆயிரக் கணக்கானவர்கள் நகரங்களுக்கு வருகைத் தந்தமைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியவர்கள் எதிர்க்கட்சியினர்" என்றார்.

"கொரோனாவை பரப்பி, மக்களை கொல்வதே இவர்களின் நோக்கமாகும். இதனைதான், அன்றிலிருந்து நாம் கூறி வருகிறோம்" என்றார்.

## பதிவுத் திருமணத்துக்கு மட்டுமே அனுமதி

திருமணப் பதிவுகளை மாத்திரம் வீடுகளில் நடத்த முடியும். அதில், மணமகள், மணமகன், அவர்களின் குடும்பத்தினர், பதிவாளர் மற்றும் இரண்டு சாட்சியாளர்கள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும். அவர்களை தவிர்ந்த ஏனைய எவரும் திருமணப் பதிவில் கலந்துகொள்ள முடியாது என்றார்.

## மதில் விழுந்து இளைஞன்...

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கமைய, சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டார்.

தடயவியல் பொலிஸார் மற்றும் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

LK Newspapers Viber Community

# தடுப்பூசியே வருமுன் காக்கும்


## ஏற்றிக்கொள்ளாதவர்களை ஏற்றிக்கொள்ளுமாறு கோருகிறார் ராம்

இலங்கையில் வழங்கப்படும் கொவிட்-19 தடுப்பூசிகள் அனைத்தும் உலக சுகாதார அமைப்பால் அங்கிகரிக்கப்பட்டவையாகும். அதனால் தொடர்ந்தும் தாமதிக்காது தடுப்பூசியை போட்டுக்கொண்டு எம்மை நாமே பாதுகாத்துக்கொள்வோம் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளர் சி.வை.பி. ராம், கேட்டுக்கொண்டுள்ளார்.

யாராவது தடுப்பூசியை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் தயக்கப்படாமல் அதனை ஏற்றிக்கொள்ள வேண்டும். நாட்டின் தற்போதுள்ள நிலைமையில் வருமுன் பாதுகாத்துக்கொள்ள இதுவே தற்போதுள்ள ஒரே வழியாகும் என்றார்.

கொவிட்-19 தடுப்பூசி தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தடுப்பூசி போட்டவர்களுக்கும் கொரோனா தொற்று வந்துள்ளதே என நீங்கள் சிந்திக்கலாம். ஆனால், கொரோனா வைரஸ் எல்லோரையுமே தொற்றும். ஆனால், தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு மட்டுமே, அவர்களது உடலில் உள்ள நோயெதிர்ப்பு சக்தி அதனை எதிர்த்துப் போராடும். அதன் மூலம் கடுமையான பாதிப்புகளின்றி மரணத்தில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதனால், நீங்களும் உங்கள் வருங்கால சந்ததியும் நிம்மதியாக வாழ தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள். எதிர்காலத்தில், தடுப்பூசிச் சான்றிதழ் இன்றி வெளியே நடமாட முடியாத நிலைமை வரப்போகிறது. எனவே, அதிகாரிகள் தேடி வரும் வரை காத்திருக்காதீர்கள்.

நீங்கள் இதுவரை தடுப்பூசி ஏற்றிக்கொள்ளவில்லை என்றால், 1906 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள். அல்லது 0112860002 இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள். அல்லது நடமாடும் தடுப்பூசி சேவையின் Mobilevaccination@colombo.mc.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

மேலும் தடுப்பூசி போட்டபின்னரும் சுகாதார விதிகளைக் கடைப்பிடியுங்கள். காரணம், நோய் உங்களைப் பாதிக்காவிட்டாலும், நோய்த் தொற்றை மற்றவர்களுக்குப் பரப்பும் 'நோய்க் காவியாக' கூட நீங்கள் மாறலாம்.

எனவே, முகக் கவசம், பொது இடங்களில் சமூக இடைவெளியை பேணுதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல் போன்ற விதிகளைக் கடைப்பிடித்து, சுகாதார வழிகாட்டல்களுடன் இருங்கள் என்றும் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



வவுனியா நகர், வவுனியா தெற்கு பிரிவுகளின் கார்தாசின் குளம், மகரம்பைக்குளம், மாமடுவ ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் குடிநீர் குழாய்களை பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்படுமென நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகங்களில் குடிநீர் குழாய்களை வழங்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கலந்துகொண்டார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார,

வவுனியா நீர் திட்டத்துக்கு நீர் பெற்றுக் கொள்ளும் இடமாக சேராறு நீர் தேக்கம் காணப்படுகின்றது. வவுனியாவுக்குத் தேவையான குடிநீரை வழங்குவதற்கு நீர் பெற்றுக்கொள்ளும் வளங்கள் போதுமானளவு காணப்படுகின்றன. புதிய குழாய்களைப் பொருத்தி அனைவருக்கும் குடிநீர் வழங்குவது எமது வேலைத் திட்டமாகும். வருடாந்தம் நாம் வரவு செலவுத் திட்டம் மூலம் குறிப்பிடத்தக்க அளவு குடிநீருக்காக நிதியை ஒதுக்கி நீர் வளங்கள் அமைச்சு பணியாற்றி வருகின்றது. இதன் மூலம் வடக்குக்கும்

> **"வவுனியா நீர் திட்டத்துக்கு நீர் பெற்றுக் கொள்ளும் இடமாக சேராறு நீர் தேக்கம் காணப்படுகின்றது. வவுனியாவுக்குத் தேவையான குடிநீரை வழங்குவதற்கு நீர் பெற்றுக்கொள்ளும் வளங்கள் போதுமானளவு காணப்படுகின்றன**

வவுனியா பிரதேசத்துக்கும் குடிநீர் வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். வடக்கில் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதே எமது நோக்கமாகும் என்றார்.

இந்நிகழ்வில், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், நீர் வளங்களின் அமைச்சரின் வன்னி மாவட்ட இணைப்பாளர் வி. சங்கரலிங்கம் உள்ளிட்ட உள்ளூராட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.



## கும்பல் பெரஹரா...

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் கும்பல் பெரஹரா, நேற்று முன்தினம் (15) இரவு நடைபெற்றது. (படங்கள்: சேன் செனவிரத்ன)

### இராணுவத் தளபதியின்

# வீட்டை வீடியோ எடுத்தவர் யார்?

இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவின் வீட்டை வீடியோ செய்ய லேண்ட் கிரஷர் வாகனத்தில் வந்த நபர்கள் தொடர்பில் வெலிக்கடைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு இராணுவத் தளபதியின் வீட்டை வீடியோ செய்ததாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இராணுவத் தளபதியின் வெலிக்கடை வீட்டுக்கு அருகில் கடந்த 14ஆம் திகதி வந்தவர்களே, இராணுவத் தளபதியின் வீட்டையும் வீட்டைச் சுற்றிய பகுதிகளை வீடியோ செய்ததாக அப்பிரதேசத்தில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வந்தவர்களில் இருவர் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத்தினர் அடையாளம் கண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும், அவர்கள் வந்திருந்த வாகன இலக்கம் தொடர்பான தகவல்களைக் கொண்டு வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

### பொலிஸாருக்குப் பயிற்சிகளை வழங்குவதை

# பிரித்தானியா நிறுத்தவேண்டும்

இலங்கை பொலிஸார் திட்டமிட்ட சித்திரவதைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, எனவே, இலங்கை பொலிஸாருக்குப் பயிற்சிகளை வழங்குவதை பிரித்தானியா நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இலங்கை பொலிஸாருக்கு இனிமேல் பயிற்சிகளை வழங்கப்போவதில்லை என ஸ்கொட்லாந்து பொலிஸாரின் தீர்மானத்தை வரவேற்றுள்ளதாகவும், 2016ஆம் ஆண்டு முதல் இலங்கை பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்குவதை பிரித்தானியா நிறுத்திக்கொள்ள வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொலிஸ் பிரிவுகள் பல்வேறு காலக் கட்டங்களில் நிகழ்த்திய சித்திரவதைகள் தொடர்பான ஆய்வுகளை



மேற்கொண்டு, அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கை பொலிஸாரின் மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள் தொடர்பில் ஆதாரங்களுடன் சமர்ப்பணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினருக்கு,பிரித்தானியா பயிற்சிகளை வழங்குவதை அடிப்படையாக வைத்து, தம்மீதான குற்றங்களை இலங்கை பொலிஸார் வெள்ளையடிப்பு செய்வதற்கு முயற்சிப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உயிர்களோடு விளையாடுவதை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

நாட்டை முடக்க வேண்டுமென வைத்தியர்கள் கோரும்போது, அதனைக் கேட்காத அரசாங்கம், மக்களின் உயிரோடு விளையாடுவது பாரிய குற்றமெனத் தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, மக்களின் உயிரோடு விளையாடுவதை அரசாங்கம் நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் சிறுபிள்ளைத்தனமாக கருத்துகளைக் கூறி மக்களின் உயிரோடு விளையாடிக்கொண்டு வருகிறது. மக்களின் உயிரோடு விளையாடுவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உரிய காலத்தில் நாட்டை முடக்காததால், நாடு பாரிய விளைவுகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஏனைய நாடுகள் தடுப்பூசியை செலுத்தியிருக்கின்ற போதிலும், தற்போதே அது தொடர்பான அறிவிப்புகளை அரசாங்கம் விடுத்துள்ளது என்றார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்கு தடுப்பூசி செலுத்திக்கொண்டார் என்பது தொடர்பில் இராணுவத் தளபதி கூறியிருந்தார். இராணுவத் தளபதியின் இக்கருத்து கவலையளிக்கிறது. சுகாதார சட்டத்திட்டங்களுக்கு அமைய ஒருவர் எங்கு தடுப்பூசியை செலுத்திக்கொண்டார் என்பது தொடர்பில் அறிவிக்க எவருக்கும் அதிகாரம் கிடையாது என்றார். ரணிலுக்கு எப்போதும் டீல் அரசியல் இருந்ததில்லை எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியினருக்கே டீல் அரசியல் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.



### முஸ்லிம் தனியார் சட்டம்;

# மகஜர் கையளிப்பு

முஸ்லிம் தனியார் சட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள மாற்றங்கள் தொடர்பாக, முஸ்லிம் சமூகத்துடைய கருத்துகளைப் பிரதிபலிக்கும் வகையில், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா, முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீலங்கா, தேசிய சூரா சபை, அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை, என்பன கூட்டாக இணைந்து அண்மையில் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

1951ஆம் ஆண்டின் இலக்கம் 13ஐக் கொண்ட இலங்கை முஸ்லிம் விவாக - விவாகரத்துச் சட்டமானது முஸ்லிம் தனியார் சட்டங்களின் ஒரு பகுதியையும் கொண்டுள்ளது. எந்தவொரு முஸ்லிம் நபரும் மீறிச் செயற்பட முடியாத, புனித குர்ஆனின் கட்டளைகள் தொடர்பான அம்சங்கள் அதனுள் உள்ளடக்கம் பெற்றுள்ளன.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஆயிரம் வருடங்களுக்கும் மேலான பூர்வீகத்தை இங்கு கொண்டுள்ளார்கள். இவர்கள் பின்பற்றிவரும் இவர்களது உரிமைகள் தொடர்பான விடயங்களான விவாக - விவாகரத்து, தாபரிப்பு, நன்கொடை, வாரிசுரிமை, முஸ்லிம் தர்ம நிதியம் உள்ளிட்ட பள்ளிவாசல்கள், பெரியார் அடக்கஸ்தலங்கள்

> **"தனியாக சட்டத்தை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படுவதானது பல உள்நோக்கங்களை வைத்தவாறு செயற்படுகின்றது**

மற்றும் இஸ்லாமிய விடுதி நிலையங்கள் யாவும் எமது நினைவுக்கப்பால் செல்லும் காலம் முதல் இந்நாட்டில் ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்களின் ஒப்புதலையும் அங்கிகாரத்தையும் பெற்றே வந்துள்ளன.

இலங்கை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் மீதான அத்தியாயம் III இல் கூட சமய, நம்பிக்கை வழிபாடு, வணக்க வழிபாடு, சமய போதனைகளைப் பின்பற்றல் போன்றவற்றுக்கான உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எனவே, தனியாக ஒரு குறித்த சட்டத்தை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படுவதானது பல உள்நோக்கங்களை அடிப்படையாக வைத்தவாறு செயற்படுகின்றது என்பதையும் பொருள்படுத்துகின்றது. அத்துடன் அவ்வாறான செயற்பாடானது, முஸ்லிம்களின் அடிப்படை சமய உரிமைகளையும் மிகமோசமாக மீறக்கூடியதாகவும் அமைகின்றது எனவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'நாளாந்தம் 30 ஆயிரம் தொற்றாளர்கள் பதிவாகலாம்'

பரிசோதிக்கப்படாத 30 ஆயிரம் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நாளாந்தம் பதிவாகி வருவதாக ஊகிக்க முடிவதாக விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

கிடைக்கும் தகவல்களுக்கு அமைய இதனை ஊகிக்க முடிவதாகவும், பதிவாகும் தொற்றாளர்களைவிட அதிகளவான தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதைப் பலரும் மறைக்கிறார்கள் என தெரிவிக்கும் சுகாதாரப் பிரிவினர், இது பொறுப்பற்ற செயற்பாடு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தனது வீட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களை வைத்துக் கொண்டு பலர் தங்களது பணிகளுக்கு



சென்றிருப்பதாகவும், இதுபோன்ற பொறுப்பற்ற சம்பவம் அரச அச்சுத் திணைக்களத்திலும் பதிவாகியுள்ளதெனவும் சுகாதார தரப்பினர் தெரிவிக்கிறார்கள்.

இதேவேளை, தொற்றுக்குள்ளாகும் தொற்றாளர்களில் 90 சதவீதமானோர் டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் என விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### மக்களுக்கு உதவாத அரசாங்கம்

# விலக வேண்டும்

மக்களுக்கு உதவ முடியாத அரசாங்கம், ஆட்சியிலிருந்து விலக வேண்டுமென தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமரத்ன, தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றாத அமைச்சர்களும் பதவி விலக வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பொறுப்புகளை நிறைவேற்றாத, பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாத அமைச்சர்கள் எவராவது அரசாங்கத்தில் இருப்பார்கள் என்றால், அவர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

நாம் தற்போது ஆபத்தான நிலையில் இருக்கிறோம். இவ்வாறான நிலையில் இருந்து கொண்டு ஒருவர் மீது ஒருவர் குற்றங்களை சுமத்திக்கொண்டிருக்காமல் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

மக்கள் மரண பயத்தில் இருக்கிறார்கள். அவர்களது உயர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றே மக்கள் கோருகிறார்கள். இவ்வாறான நிலையில் மக்களுக்கு நாம் ஏன் இன்னும் பயத்தைக் கூட்ட வேண்டும்? மக்கள் மரண பயத்தைப்



> **"நாம் தற்போது ஆபத்தான நிலையில் இருக்கிறோம். இவ்வாறான நிலையில் இருந்து கொண்டு ஒருவர் மீது ஒருவர் குற்றங்களை சுமத்திக்கொண்டிருக்காமல் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும்**

போக்கி, நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டும். அரசாங்கம் என்ற நிலையில் நாம் அதனையே செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பால்

# காணி அளவீடு இடைநிறுத்தம்

■ எஸ். நிதர்ஷன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கற்கோவளம் இராணுவ முகாமுக்கு காணி சுவீகரிப்பதற்காக முன்னெக்கப்படவிருந்த அளவீட்டு பணி நடவடிக்கை, மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பை அடுத்து கைவிடப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கற்கோவளம் இராணுவ முகாமுக்கு காணி சுவீகரிப்பதற்காக, நேற்று (16) அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படவிருந்தன.

இந்நிலையில், அங்கு கூடிய பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், சட்டத்தரணி காண்டீபன் ஆகியோர் உட்பட பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.


அத்துடன், காணி உரிமையாளர்கள், பிரதேச செயலகத்தால் அழைக்கப்பட்ட போதும், அவர்கள் சமூகமளிக்கவில்லை.

உரிமையாளர்கள் சமூகமளிக்காமை காரணமாகவும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்புக் காரணமாகவும் காணி அளவீட்டுப் பணி கைவிடப்பட்டது.

அதிக விலைக்கு

# மணல் விற்றால் சிக்கல்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்ட விலைக்கு மணல் விற்பனை செய்யப்படாது, அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டால், அவர்களின் மணல் அகழ்வுக்கான அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுமென, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில், நேற்று (16) காலை, மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தற்போது மன்னார் மாவட்டத்தில், மணல் விலை அதிகரித்துள்ளதாக மக்களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடு கிடைக்கப்பெற்ற நிலையில், இந்த விசேட கலந்துரையாடல் மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

அதன் அடிப்படையிலும், புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் அண்மையில் மேற்கொண்ட கள ஆய்வுக்கு அமைவாக, அவர்களால் வழங்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும், தற்போது மன்னார் மாவட்டத்தில் 46 அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாகவும், அவர் கூறினார்.

இந்த அனுமதிப்பத்திரங்கள் இலுப்பைக்கடவை, கூராய், அருவியாறு, பெரியமடு, முசலி போன்ற இடங்களில் மணல் அகழ்வு செய்ய வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் ஊடாக மக்களுக்கு குறைந்த விலையில், மணல் வழங்கப்பட வேண்டும் என்பதை அறியப்படுத்தி உள்ளதாகவும் கூறினார்.

இதன் அடிப்படையில், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இடங்களுக்கு 1 டிப்பர் மணல் மண் 29 ஆயிரம் ரூபாய்க்கும், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் 30 ஆயிரம் ரூபாய்க்கும், தலைமன்னார் பிரதேசத்துக்கு 34 ஆயிரம் ரூபாய்க்கும், நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவில் 32 ஆயிரம் ரூபாய்க்கும் மணல் விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தை உரிய முறையில் அமல்படுத்துமாறு, கிராம அலுவலகர்களுக்கு பிரதேச செயலாளர்களின் கையொப்பத்துடன் சிட்டை வழங்கவுள்ளோதோடு, மணல் அகழ்வு செய்பவர்களின் விவரங்களையும் வழங்கவுள்ளோம். எனவே, அமல்படுத்தப்பட்ட விலையை உறுதிப்படுத்தி, மணல் விநியோகிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.



பாழடைந்த கிணற்றில் இருந்து

# பாயில் சுற்றிய சடலம் மீட்பு

■ மு.தமிழ்ச்செல்வன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, இரத்தினபுரம் கிருஷ்ணன் கோவிலடியில் உள்ள தனியார் காணி ஒன்றில் அமைந்துள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து, நேற்று முன்தினம் (15), பாயில் சுற்றப்பட்ட நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியதை தொடர்ந்து, பிரதேச மக்கள் ஆராய்ந்த போதே, கிணற்றில் பாயால் சுற்றப்பட்ட நிலையில், இனந்தெரியாத சடலம் காணப்பட்டுள்ளது.

குறித்த காணி சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாக, பொதுமக்கள் தெரிவித்தனர்.

சடலம், சில நாள்களுக்கு முன்னர் போடப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுவதாகவும் சடலம் ஆண் ஒருவருடையதாக இருக்கலாம் என்றும், பொலிஸார் கூறினர்.

கிணற்றை அண்மித்த பகுதியில் சில தடயங்கள் காணப்படுவதாலும் சடலம் பாயால் சுற்றிக் காணப்படுவதாலும், இந்த மரணம் கொலையாக இருக்கலாம் என்ற கோணத்தில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தேசிய கபடி அணிக்கு

# கிளிநொச்சி யுவதிகள் மூவர் தெரிவு

■ மு.தமிழ்ச்செல்வன்







இலங்கையின் தேசிய கபடி அணியின் முதற்கட்ட தெரிவில், கிளிநொச்சியில் இருந்து 3 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உருத்திரபுரம் சிவநகர் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் மூன்று யுவதிகளே, இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

14ஆம் திகதியன்று, கொழும்பில் இடம்பெற்ற தேசிய கபடி அணிக்கான முதற்கட்ட தெரிவில், நாடளாவிய ரீதியில் 25 பேர் கலந்துகொண்டனர். இதில் 18 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இந்த 18 பேரில், கிளிநொச்சி யுவதிகள் மூவரும் அடங்குகின்றனர்.

கிளிநொச்சி சிவநகர் பாடசாலையின் பழைய மாணவிகளான இவர்கள், கடந்த காலங்களில் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குப்பற்றியிருந்தனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இடம்பெறவுள்ள ஆசிய மட்ட கபடி போட்டிக்கான இலங்கை அணியின் முதற்கட்டத்தில் தெரிவில் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 18 பேரிலிருந்து இறுதியாக 12 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்தத் தெரிவிலும் இவர்கள், தேசிய அணிக்குள் உள்வாங்கப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

# அம்மன் கோவில் நகைகள் திருட்டு

■ சண்முகம் தவசீலன், கே.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, மாங்குளம், பாலமரத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக, மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (15) அதிகாலை, கோவிலின் கதவை உடைத்து உள் நுழைந்த கொள்ளையர்கள், அம்மனின் தங்க நகைகள் சுமார் 18 பவுணுக்கு மேல் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக, கோவில் நிர்வாகியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீனவர்களுக்கு இடையிலான பகை

# ஆறு படகுகளுக்கு தீ வைப்பு

■ தீஷான் அஹமட், ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை, கும்புறுப்பிட்டி, நாவற்சோலை கடற்கரையில் 6 மீன்படி படகுகள் இனந்தெரியாத விசமிகளால், நேற்று (16) அதிகாலை 1 மணியளவில் எரியூட்டப்பட்டுள்ளன.

இதன்போது, நான்கு படகுகள் முற்றாக எரியூட்டப்பட்டு உள்ளதுடன், இரண்டு படகுகளுக்கு பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பொதுமக்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்துள்ளனர்.

மீனவர்களுக்கு இடையிலான பகையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறைக்கு

# விரைவில் தீர்வு பெற்றுத்தருவேன்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உறுதி



தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவேன் எனப் பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களைக் கையளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் நாட்டை சுபீட்சத்தின்பால் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்துக்கு அமைவாக 'அனைவருக்கும் கல்வி' என்னும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மட்டக்களப்பில் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கிவைக்கும் நிகழ்வு இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போது, இம்மாவட்டத்தில் நீண்ட காலமாகத் தரமுயர்த்தப்படாமல் இருந்து வந்த பாடசாலைகள் தற்போதுள்ள அரசாங்கத்தால் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும், மேலும் தகுதிவாய்ந்த பல பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்கான வேலைத்திட்டங்களைத் தான் முன்னெடுத்துவருவதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும் தரமுயர்த்தப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை வழங்கும்பட்சத்தில் அவற்றை மிக விரைவாக நிவர்த்தி செய்து தருவதாகக் குறிப்பிட்டதோடு, இவ்வாறான தரமுயர்த்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கல்வி அமைச்சர், ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்திருந்தார்.

# மீன்பிடித் தோணிகள் வழங்கி வைப்பு

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சீ. எம். ஜவாஹிரின் முன்மொழிவினூடாக அல் ஹிக்மா பவுன்டேஷனால் நேற்று முன்தினம் (15) மீன் பிடித் தோணிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வானது கந்தளாய்க் குளத்துக்கு அருகில் அப்பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, அல் ஹிக்மா பவுன்டேஷன் பணிப்பாளர் கலாநிதி இபாதுல்லா மௌலவி ஆகியோரின் பிரதான பங்குபற்றலுடன் நடைபெற்றது.



நீண்டகாலமாக மரக் கடத்தல்;

# ஒருவர் மடக்கிப் பிடிப்பு

■ எப்.முபாரக்

திருகோணமலை, கந்தளாய் காட்டுப் பகுதியில் நீண்டகாலமாக மரக்கடத்தலில் ஈடுபட்டுவந்த சந்தேகநபரை, திருகோணமலை வனவிலங்கு மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் (15) கைது செய்தனர்.

இம்மரங்கள் மாட்டு வண்டிகள், படகுகள் மூலம் கிண்ணியாவுக்குக் கொண்டு செல்லப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே, இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவரிடமிருந்து கடத்தலுக்குப் பயன்படுத்திய நான்கு வண்டிகளையும் அரச தேக்கு தோட்டங்களில் இருந்து வெட்டப்பட்ட மரங்களையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

அத்துடன், சந்தேக நபரைத் தடுத்து வைத்துள்ளதோடு, நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.





கிண்ணியாவில்


# தலைகீழாக புரண்ட கார்

■ ஹஸ்பர் ஏ ஹலீம், எப்.முபாரக்

கிண்ணியா, கச்சகோடித்தீவு-பொன்னாரந்தீவு பிரதான வீதியில் கார் ஒன்று, நேற்று முன்தினம் (15) மாலை விபத்துக்குள்ளானது.

தம்பலகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த காரே இவ்வாறு தலைகீழாகப் புரண்டு விபத்துக்குள்ளாகி உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த காரில் சாரதி மாத்திரமே பயணித்ததாகவும், அவர் எவ்வித காயங்களும் இன்றி உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு முன்னர் சுமார் 27 க்கும் அதிகமான விபத்துகள் இவ்விடத்தில் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

LKNewspapers Viber Community



## கொரோனா செய்தித் துளிகள்

பிரதேச சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் (15) 225 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன், மொனராகலை மாவட்டத்தின் மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 8,017ஆக அதிகரித்துள்ளது. (சுமணசிறி குணதிலக)

தொற்று காரணமாக ஹட்டன் நகரிலுள்ள அரச வங்கி ஒன்று, நேற்று (16) தொடக்கம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. ( எம். கிருஸ்ணா)

கண்டி, மஹியாவ பிரதேசத்திலுள்ள முதியோர் இல்லமொன்றில் உள்ள 47 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதென, பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சேஹ்ன் செனவிரத்ன)

பதுளை ரயில் நிலையத்துக்கு முன்பாக 111 பேரிடம் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது, 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (பாலித ஆரியவன்ஸ)

கண்டி, ஹந்தானை பிரதேசத்திலுள்ள பௌத்த பிரிவெனா ஒன்றில் கல்வி கற்று வரும் 30 பிக்கு மாணவர்களுக்கு கொரோனா தொற்றியுள்ளதென, கண்டி மாவட்ட சுகாதார வைத்திய பிரிவு தெரிவித்துள்ளது.( சேஹ்ன் செனவிரத்ன)

நாட்டின் தற்போதைய நிலையை கருத்திற்கொண்டு நாளை (18) தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதி வரை பதுளை நகரிலுள்ள சகல வர்த்தக நிலையங்களையும் மூடுவதற்கு, பதுளை வர்த்தக சங்கத்தின் தவிசாளர் வசந்த அபேகோன் தெரிவித்துள்ளார். (பாலித ஆரியவன்ஸ)

பதுளையில் உள்ள 15 பிரதேச செயலகங்களில் கொரோனா தொற்றால் இதுவரை 176 பேர் உயிரிழந்துள்ளதுடன், 12,822 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். ( எம். செல்வராஜா)

பதுளை பொது வைத்தியசாலையில்

# தொற்றாளர்களே மிஞ்சப்போகின்றனர்

### வைத்தியர் பாலித தெரிவிப்பு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நால்வர், அம்பியூலன்ஸ் சாரதிகள் மூவர் உள்ளிட்ட அலுவலர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இந்த நிலைமை நீடித்தால், பாரிய நெருக்கடிக்கு உள்ளாக நேரிடும் என, பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் பிரதான வைத்தியர் பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ள அவர், பதுளை வைத்தியசாலையில் 126 தொற்றாளர்கள் 4 வார்ட்டுகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்களுள் 46 பேர், ஒட்சிசன் தேவையுடையவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், வைத்தியசாலையில் கட்டில்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், நோயாளர்கள் கட்டில்களுக்கு அடியிலும் தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது வைத்தியசாலையில் வழங்கக் கூடிய அதிகூடிய கட்டில்கள் மற்றும் வார்டுகளை கொரோனா சிகிச்சைக்காக வழங்கியிருந்தாலும் மேலும் பல வார்டுகள் கையகப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




இந்த நிலையில், தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், வைத்தியசாலையில் உயிரிழக்கும் அல்லது தொற்றுக்குள்ளான நோயாளர்களால் மாத்திரமே வைத்தியசாலையில் நிறைந்து காணப்படுவர் என்றார். எந்தவொரு நாட்டிலும் தொற்றைக் கட்டுப்படுத்தும் போதோ அல்லது மக்களைத் தெளிவுப்படுத்தும் போதோ உரிய புள்ளிவிவரங்களை சமூக மயப்படுத்தல் அவசியமாகும். ஆனால், கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வெளிவரும் புள்ளிவிவரங்களுக்கும் நாம் இங்கு அவதானிக்கும் புள்ளிவிவரங்களுக்கும் பாரிய மாற்றங்கள் உள்ளதென்றார்.

உதாரணமாக, கடந்த 13ஆம் திகதி இலங்கையில் 214 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட மாவட்டம் 5ஆம் இடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், எமது மாவட்டத்தில் மாத்திரம் 317 பேர் அன்றைய தினம் பதிவானார்கள் என்றார். எனினும், அதிக தொற்றாளர்கள் அடங்கிய மாவட்டமாக எமது மாவட்டம் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், இவ்வாறான அறிக்கையிடல்களால் பாரிய சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றார்.





## சுதந்திர தினம்

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினம், கண்டி உதவி இந்தியத் ஸ்தானிகர் டொக்டர் எஸ். ஆதிரா தலைமையில், கண்டியிலுள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது. (மொஹொமட் ஆஸிக் )



# மூலிகை தோட்டம் திறந்து வைப்பு

■ சிவாணிஸ்ரீ

மாவனெல்ல, உதுவன்கந்த தர்ம தூத விகாரையில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டமானது, இந்த மாதம் 14ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

கலாநிதி ஓமல்பே சோபித்த தேரரின் எண்ணக்கருவின் கீழ், பராமரிக்கப்பட்டு வரும் குறித்த மூலிகைத் தோட்டமானது, 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளதுடன், இங்கு 40 வகையான மூலிகைகளும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூலிகைத் தோட்டத்துக்கான அடிப்படை வசதிகள், சப்ரகமுவ மாகாண ஆயுர்வேத திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தோட்டத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில், கலாநிதி ஓமல்பே சோபித்த தேரர், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




சமையல் எரிவாயு கோரி

# வீதிக்கு இறங்கிய அப்பக் கடைக்காரர்

■ என்.ஆராச்சி

தெரணியகல நகரில் அப்பக் கடையொன்றை நடத்தி வரும் நபர் ஒருவர், சமையல் எரிவாயு கோரி, வீதிக்கு இறங்கி போராட்டம் ஒன்றை நேற்று (16) முன்னெடுத்தார்.

அப்பக் கடை வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை நடத்தி வரும் இவர், கடந்த பல வாரங்களாக தமக்கு சமையல் எரிவாயு கிடைக்கவில்லை என்றும் இதனால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தனது அப்பக் கடை மூடப்பட்டுள்ளதால், தமக்கு எவ்வித வருமானமும் இல்லை என்பதுடன், இதனால் நோயாளியான தனது தாய்க்கு சிகிச்சை செய்வதற்குக் கூட பணமில்லை எனத் தெரிவித்து, நகர மத்தியில், வெற்று சமையல் எரிவாயு சிலிண்டர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார்.





கலவான- இறக்குவானை வீதியில்

# மண்சரிவு எச்சரிக்கை

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

கடந்த சில தினங்களாக பெய்த மழை காரணமாக, இரத்தினபுரி மாவட்டத்தின் கலவான- இறக்குவானை வீதியில் பல இடங்களில் மண்சரிவு அச்சுறுத்தல் நிலவுகிறது.

எனவே, இவ்வீதியில் பயணிக்கும் சாரதிகள், அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் இரத்தினபுரி மாவட்டக் காரியாலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாகஸ்தன்ன தோட்ட மக்கள்

# மீண்டும் ஆர்ப்பாட்டம்

■ என்.ஆராச்சி

அரச பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய யட்டியாந்தோட்டை, நாகஸ்தன்ன தோட்டத்தின் 300 ஏக்கர் காணியை தனியாருக்கு விற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாகஸ்தன்ன தோட்ட மக்களால் நேற்று (16) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சீபொத்- கம்பளை வீதியின் ஹொரகொல பொலிஸ் காவலரணுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, நாகஸ்தன்ன தோட்டத்தின் உதவி தோட்ட அதிகாரியின் வீட்டுக்கு அருகில் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், குறித்த அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, கடந்த மாதமும் குறித்த தோட்ட மக்களால், தோட்ட காணியை தனியாருக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தேயிலைக் கன்றுகளை உருவாக்கும்

# தவறணைகளுக்கான அனுமதி வழங்கல்

■ எம். செல்வராஜா

தேயிலை சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபையால் ஹாலி-எலையில் புதிதாக தேயிலைக் கன்றுகளை உருவாக்கும் தவறணைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு, நேற்று (16) நடைபெற்றது.



இதன்போது, குறித்த நடவடிக்கைக்கான ஆரம்ப நிதியுதவிகள், சேதனப் பசளை உற்பத்தி, அதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள், சேதனப் பசளை செய்முறை பயிற்சி வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான அ.அரவிந்தகுமார், சுதர்சன தெனிப்பிட்டிய, சாமர தசநாயக்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

LK Newspapers Vibe Community

# நாட்டை முடக்காமல் இருக்க வாயை முறையாக மூடவேண்டும்

உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகாத நிலையில், சுய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, சுமார் 13க்கும் மேற்பட்ட நகரங்கள் இழுத்து மூடப்பட்டன. இதனூடாக, நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறையும்.

சந்தர்ப்பத்தைப் பார்த்து, சுருட்டிக்கொள்ளும் நினைப்பில் பலரும் இருக்கையில், உயிர்களுக்கு மதிப்பளித்து, வர்த்தக நிலையங்களை மூடிவிடும் தீர்மானத்துக்காக, அந்த வர்த்தகர்களைப் பாராட்டியே ஆகவேண்டும்.

ஒவ்வொன்றும் ஒவ்வொன்றுடன் பின்னிப்பிணைந்து இருக்கும். நுகர்வோருக்கும் வர்த்தகர்களுக்கும் இடையிலான தொடர்பு, மிகநெருக்கமாக இருக்கவேண்டும். இல்லையேல், கொள்வனவு செய்த எந்தவொரு பொருளையும் விற்பனை செய்யமுடியாது.

இவ்வாறான உறவுப் பாலத்துக்குள் இருக்கும் வர்த்தகத் தரப்பினர், எதிர்காலத்தையும் மக்களின் உயிர்களையும் கருத்தில்கொண்டு, இலாபநோக்கமின்றி எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்க வேண்டும். இதனூடாக, அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் பயணங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இதனிடையே, வெளியில் சென்று திரும்புவதில் பிரச்சினையில்லை. ஆனால், சுகாதார வழிகாட்டல்களை கடுமையாகப் பின்பற்றவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. முகக்கவசங்களை முறையாக அணிந்து, வாயை மூடிக்கொண்டால், நாட்டை முழுமையாக முடக்கவேண்டிய தேவை ஏற்படாதென, சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவை பணிப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துச் செல்கிறது. இளவயது மரணங்களையும் தவிர்க்க முடியாதுள்ளது. வீடுகளுக்குள்ளே முடங்கிக் கிடந்த இளம் வயதினர் சிலர், கொரோனா தொற்றால் மரணித்து விட்டனர்.

உடலுக்குத் தேவையான போஷாக்கு நிறைந்த உணவுகளை உண்ணுதல், ஓய்வெடுத்தல், உடற்பயிற்சிகளை செய்தல், சூடான பானங்களை அருந்தல், போன்றவற்றையும் கடைபிடித்தல் கட்டாயமாகியுள்ளது.

வெளியில் செல்லமுடியாது; சரியான வேலைவாய்ப்பு இல்லை; இருப்பதைக் கொண்டுதான் வாழவேண்டும். இந்நிலையில், போஷாக்கான உணவு என்பது, பலருக்கும் பகற்கனவாகவே இருக்கும்.

அத்தியாவசியமற்றவற்றின் தேவைகள் குறைந்து உள்ளமையால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவேண்டியது அதிமுக்கியமானதாக அமைந்துள்ளது. 'வாயை மூடுதல்' என்பதை இரண்டு அர்த்தத்தில் பார்க்கலாம். ஒன்றுதான், முகக்கவசத்தை முறையாக அணிதல்; மற்றொன்று, கட்டுப்பாட்டுடன் சாப்பிடுதல்.

சில வீடுகளில், மூவேளை உணவு இரண்டு வேளையாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கட்டுப்பாடின்றிச் சாப்பிடுவது, தொற்று நோய்களுடன் தொற்றா நோய்களையும் வலிந்து இழுத்துக் கொள்வதாகவே அமையும். ஆகையால், சுயகட்டுப்பாட்டுடன் இருப்பதே யாவருக்கும் நலம்.

சில கட்டுப்பாடுகளை இறுக்கியிருக்கும் அரசாங்கம், இரவு 10 மணிக்குப் பின்னர், அதிகாலை 4 மணிவரையிலும் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்துள்ளது. அதனையேனும் சரியாக அமல்படுத்தவேண்டும். இல்லையேல், உலக சுகாதார அமைப்பால் குறிப்பிடப்பட்டிருக்கும் உயிர் இழப்புகளை எதிர்கொள்வது, வெகு தொலைவில் இருக்காது என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அழும் குழந்தையை அதட்டக் கூடாது. சுதந்திரமும் இல்லாமல், வாழ வழியும் இல்லாத மக்களிடம் வீரம் பேசக்கூடாது. விழுந்தவனை உதைப்பதே பழக்கமாகிவிடும்.

ஆன்மிகத்தை அரசியலாக்கக்கூடாது. இதனை உணர்ந்தால் முழு உலகும் அன்பின் பிடிக்குள் உல்லாசமாகிவிடும். அடக்குவதில் என்ன ஆசை, என்ன பிடிப்பு? தன்னையே முழுமையாக வழங்குதலே தியாகம். தனக்கு மட்டும் என எண்ணுவதே துரோகம்.

வசதிக்கேற்ப பேசுவதும் உண்மை எதுவெனத் தெரிந்தும் விதண்டாவாதம் புரிவதும் நியாயங்களுக்கு முரணானது.

எவரையும் ஸ்தம்பிக்கும் நிலைக்குள் தள்ளலாகாது. பரந்த உலகில், விரிந்த வானில் எழுந்து பறந்து வாழ, யாருக்குத்தான் பிடிக்காது?

வாழ்வதற்கான முழு உரிமையும் தங்களுக்கும், தங்கள் சகாக்களுக்கும் மட்டுமே வேண்டும் என எண்ணி, அதனையே செயலாற்ற முனையும் நபர்கள் ஏராளம்.

சந்தோஷங்கள் தமக்கேயானது. பிறர் அனுபவிக்கலாகாது எனத் தமது செயலில் காட்டுபவர்களை உலகம் ஏற்காது; அநியாயம் நிலைக்காது.

-பருத்தியூர் பால வயிரவநாதன்

இரவு நேர ஊரடங்கு போதுமா?

# மரணங்கள் மலியும் பூமி

மொஹமட் பாதுஷா

நாட்டின் எல்லாப் பாகங்களிலும், கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்து உள்ளதால், நிலைமை கட்டுப்பாட்டை மீறிப் போவதற்கிடையில், சில வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு, சுகாதார தரப்பினர் தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை விடுத்துவந்தனர். ஆனால், அந்தத் தீர்க்கமான தீர்மானத்தை எடுப்பதில், மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வந்த அரசாங்கம், இப்போது இரவுநேர ஊரடங்கை அமல்படுத்தி உள்ளது.

கொரோனா வைரஸ் திரிபுகளின் அதிகரித்த தொற்றுக் காரணமாக சுகாதார, பொருளாதார, சமூக அடிப்படைகளில் பெரும் பின்னடைவையும் அவல நிலைமையையும் இலங்கை சந்தித்திருக்கின்ற இக்கால கட்டத்தில், அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற இவ்வாறான காலம் பிந்திய, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கட்டுப்பாடுகள், இந்த நெருக்கடிகளை எல்லாம் தீர்த்து வைக்கப் போதுமான வல்லமையைக் கொண்டிருக்குமா என்ற கேள்வி, எல்லோரிடமும் இருக்கின்றது.

கடந்த ஒன்றரை மாதத்துக்குள், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையொன்று வரப்போகின்றது என்று, சுகாதார துறையினர் முன்னரே கூறியிருந்தனர். ஆனால், அரசாங்கம் அதைப் பெரிதாகக் கவனத்தில் எடுக்கவில்லை.

சில விடயங்களில், சுகாதார அதிகாரிகளை விட, படை அதிகாரிகளுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்படுவதைப் போல, நாட்டை முடக்கும் விடயத்தில் சுகாதார நிபுணர்களின் சிபாரிசை விட, அரசியல், பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்கை அரசாங்கம் வெளிப்படுத்தியது.

அரசாங்கம், தனது முழுக் கவனத்தையும் பெருந்தொற்றின் மீது செலுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டது. ஆனால், சட்டத் திருத்தங்கள், அரசியல் குழப்பங்கள் ஆகியவற்றில் ஆட்சியாளர்கள் தமது கவனத்தைச் சிதற விட்டனர். சூழல் நெருக்கடிகளையும் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் 'சமாளிக்க' அதிக காலத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது.

அரசாங்கம், கொரோனாவை ஒரு சாதாரணமான விடயமாகக் கருதியது போல செயற்பட்டது. நாட்டை முடக்கினால், பொருளாதாரம் இன்னும் அதலபாதாளத்துக்குள் விழுந்து விடும் என்று சொல்லப்பட்டது. அது யதார்த்தமான விளக்கம்தான். ஆனால், இன்று ஒவ்வொரு தனி குடும்ப அலகின் மீதும், பொருளாதாரச் சுமை அதிகரித்துள்ளதைக் காண்கின்றோம்.

இன்று அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டை முடக்கினால், ஏழை மக்கள் பொருளாதார ரீதியாக சிரமப்படுவார்கள் என்று வியாக்கியானம் சொன்ன அரசாங்கம், பல பொருட்களுக்கு விலைகளை அதிகரித்தமையானது, ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் பாதகமான விளைவை ஏற்படுத்தியுள்ளது. இது எந்த வகையில் நியாயம் எனத் தெரியவில்லை.

இவ்வாறு பல விடயங்களில், அரசாங்கம் செயற்திறன் இல்லாமலும் மக்களின் மனங்களைப் புரிந்து கொள்ளாமலும் நடந்து கொண்டதால், குறிப்பிட்ட காலத்துக்குள் சிங்கள மக்களாலும் விமர்சிக்கப்படுகின்ற ஒரு புள்ளிக்கு வந்திருக்கின்றது. இந்தப் பின்புலத்தில், நாட்டில் அமலில் இருந்த கட்டுப்பாடுகளும் மெல்ல மெல்ல செயலிழந்து போயின. இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதல் என்ற பெயரில், மக்களும் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டனர்.

இந்தப் பின்னணியில், 'டெல்டா' உள்ளிட்ட திரிபுகள் சமூகத்துக்குள் ஆழமாக ஊருடுவி விட்டன. இப்போது மொத்த மரணங்களின் எண்ணிக்கை ஆறாயிரத்தைத் தாண்டி விட்டது. தினமும் 150 இற்கு மேற்பட்ட மரணங்கள் அறிவிக்கப்படுகின்றன. வைத்தியசாலைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஐ.சி.யு கட்டில்கள், ஒட்சிசன் சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தனியார் வைத்தியசாலைகளிலும் நிலைமை இதுதான்.

மிக முக்கியமாக, மரணங்கள் மலிந்த பூமியாக இலங்கை மாறிக் கொண்டு வருகின்றது. தினமும் வைத்தியசாலைகளின் பிரேத அறைகளில் சடலங்கள் நிரம்பி வழிகின்றன. இவ்வாறு இறப்போரின் உடலங்கள், ஜனாஸாக்களை எரிப்பது அல்லது அடக்கம் செய்வதிலும் பெரும் நெருக்கடி நிலையொன்று தோன்றியுள்ளது.

தகனச்சாலைகளில் நீண்ட வரிசையில், பிரேத வாகனங்கள் காத்துக் கொண்டு நிற்கின்றன. தற்போது செயற்பாட்டிலுள்ள தகன மையங்களால் நிலைமைகளைக் கையாள முடியாமல் போகலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதிலும் இடநெருக்கடி ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது. ஓட்டமாவடி, மஜ்மா நகரில் இதுவரை 1,600 சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் மட்டுமன்றி, சக மதத்தவரின் பிரேதங்களும் இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன. தினமும் சராசரியாக 25க்கு குறையாத ஜனாஸாக்கள், இங்கு வந்து கொண்டிருக்கின்றன. இதே வீச்சில் மரணங்கள் நிகழ்ந்தால், இன்னும் சில நாள்களுக்கு மட்டுமே, மஜ்மா நகரில் ஒதுக்கப்பட்ட இடத்தில் ஜனாஸாக்களை புதைக்க முடியும்.

எனவே, வேறு இடங்களில் அடக்கம் செய்வதற்கு அனுமதியைப் பெற வேண்டும். இவ்வாறு, கொரோனாவை மையமாகக் கொண்டு நாட்டில் சுகாதார, பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் என்றும் இல்லாதவாறு தலைதூக்கியுள்ளன. எனவே, இந்த வைரஸை கட்டுப்படுத்தினால் நாட்டிலுள்ள முக்கால்வாசிப் பிரச்சினைகளுக்கு ஓரளவுக்கு தீர்வு காண முடியும். அத்துடன் ஆயிரக் கணக்கான உயிர்களையும் காப்பாற்ற முடியும்.

இவ்விடயத்தை, சுகாதார தரப்பினர் நீண்ட நாள்களாக வலியுறுத்தி வருகின்றனர். கடந்த முறை கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நேரமே, பொருத்தமானதல்ல எனக் கூறிய சுகாதார நிபுணர்கள், அன்றிலிருந்து நாட்டை மூடுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

யுத்த களத்தில் நிற்கின்ற கட்டளைத் தளபதிக்குத்தான், களநிலைமை எப்படி இருக்கின்றது, என்ன நடக்கலாம் என்பது ஒப்பீட்டளவில் அதிகமாகத் தெரிந்திருக்கும். எனவே, அவர் சொல்வதை மேலிடம் கேட்டுச் செயற்பட்டாலேயே தோல்வியை தவிர்க்க முடியும். அதுபோல, கடந்த ஒன்றரை வருடங்களாக களத்தில் நின்று, கொரோனாவுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்ற மருத்துவ துறைசார்ந்தோரின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்தாலே, இந்த வைரஸை வெற்றி கொண்டு, மக்களை காப்பாற்ற முடியும்.

தாம் சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கு அமையவே, தீர்மானங்களை எடுப்பது போன்ற ஒரு தோற்றப்பாட்டை அரசாங்கம் காண்பித்து வருகின்றது. இது உண்மைதான். ஆனால், இந்தத் தீர்மானம் சற்றுக் காலம் பிந்தி எடுக்கப்படுகின்றது. அதுவரையும், சுகாதார அறிவுறுத்தலை வேறு விடயங்கள் மேவி நிற்கின்றன என்பதே யதார்த்தமாகும்.

இன்றும் அவ்வாறான ஒரு முடிவே எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டில் முழுமையாக 'கறுப்பு' முடக்கமொன்றை அமல்படுத்துமாறு சுகாதார தரப்பினர் அறிவுறுத்தி வந்த சூழலில், இரவு நேர தனிமைப்படுத்தல் ஊரடங்கு நேற்று நள்ளிரவில் இருந்து அமலுக்கு வந்துள்ளது.

இப்போதாவது ஒரு முடிவுக்கு வந்தார்களே என்ற ஆறுதல் இருந்தாலும், இரவு நேர கட்டுப்பாடுகளின் பெறுபேறுகள் பற்றி பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் உள்ளன.

முதலாவது அலையின் போது, அரசாங்கம் விதித்திருந்த நாடு தழுவிய ஊரடங்கானது சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தந்தது. மாகாணங்களுக்கு இடையில் நீண்டகாலம் பயணத்தடை விதித்தபோதும் அது எதிர்பார்த்த பெறுபேற்றை பெற்றுத்தரவில்லை எனலாம்.

நாட்டை முற்றாக முடக்கினால், அல்லது ஊரடங்கை பிறப்பித்தால், அது ஏழை மக்களை கடுமையாகப் பாதிக்கும் என்று அரசாங்கம் கருதுகின்றது. இது உண்மைதான்! ஆனால், தளர்வான கட்டுப்பாடுகள், மாகாணப் பயணத் தடையால் பாதிக்கப்பட்டது கீழ் நடுத்தர மக்களும் அடிமட்ட மக்களும்தான்.

அத்தியாவசிய சேவை, அரச சேவை என்ற பெயரில் பலர் பயணித்தார்கள். அதிகாரம் இருப்பவர்கள், வர்த்தகர்கள், செல்வந்தர்களும் உலவித் திரிந்தார்கள். ஆகவே, பெரும்பாலும் ஒன்றுக்கும் இயலாத மக்களையே மேற்சொன்ன கட்டுப்பாடுகள் வீடுகளுக்குள் கட்டிப்போட்டன. இரவு நேரக் கட்டுப்பாடுகளும் அவ்விதமாகவே அமைந்திருந்தன.

அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. ஏற்கெனவே, வழக்கமான செலவுகளுக்குக் கூட நிதி இல்லாது தடுமாறிக் கொண்டிருக்கும் சூழலில், நாட்டை முற்றாக முடக்கினால் நிவாரணங்களை வழங்க வேண்டியநிலை ஏற்படும். அத்துடன், அரசியல் ரீதியாக அதனை ஒரு கௌரவக் குறைச்சல் எனவும் அரசாங்கம் கருதுவதாகத் தெரிகின்றது.

இதனையெல்லாம் தாண்டிய ஒரு நிர்ப்பந்தமே, அரசாங்கம் இரவுநேர கட்டுப்பாட்டையாவது விதிக்கும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. ஆயினும், இரவு நேரக் கட்டுப்பாடுகள் எந்தளவுக்கு வினைத்திறனாக கொவிட் - 19 பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தும் என்ற அங்கலாய்ப்பு பொதுவாக எல்லோரிடமும் இருக்கின்றது.

கொழும்பு உட்பட நாட்டின் எல்லா பகுதிகளிலும் வைரஸ் தீவிரமாகப் பரவி வரும் நிலையில், வீதிகள் வெறிச்சோடியுள்ளன. இது அரசாங்கம் விதித்த கட்டுப்பாடுகளால் அல்ல. மாறாக, நோய், மரணம் பற்றிய பயத்தால் உருவான நிலையாகும். இந்நிலையில், இரவு நேரத்தில் யார் வெளியில் வரப் போகின்றார்கள்? யாரை இந்த ஊரடங்கு கட்டுப்படுத்தப் போகின்றது என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.

எது எவ்வாறாயினும், எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தின் பக்கத்தில் இருக்கின்ற குறைகளை மட்டும் பேசிக் கொண்டிருக்காமல் மக்களும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டும். வைரஸில் இருந்து பாதுகாப்புப் பெற வேண்டுமாயின், அரசாங்கம் நாடு தழுவிய முடக்கத்தை அறிவிக்கும் வரை காத்திருக்க வேண்டியதில்லை.

இரவு நேரக் கட்டுப்பாடு மட்டும் போதாது என்ற அடிப்படையில், மக்கள் சுய கட்டுப்பாட்டை கடைப்பிடித்து, வீடுகளுக்குள் முடங்குவது அவசியம். வைத்தியசாலைகளில் இடம் பிடித்தல், தகன சாலைகள், மையவாடிகளை தயார்படுத்துவதை விட, இது இலகுவானது என்பதைப் புரிந்து கொண்டால் சரி!

## கடிதங்கள்

### அடிப்படை வசதிகளற்ற நிலையில் நாவற்சோலை கிராமம்



திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள, மீள்குடியேற்ற கிராமமே கும்புறுப்பிட்டி கிழக்கு நாவற்சோலை கிராமம் ஆகும். இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள், பல்வேறு பொருளாதார கஷ்டங்கள் உட்பட வசதிகளற்ற குடிசைகளில் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் சுமார் 550 குடும்பங்கள் உள்ளன. சுனாமி பேரலையின் போது மீள்குடியேற்றப்பட்டதாகவும் இன்னும் ஓலை குடிசைகள், தகரக் கொட்டில்களிலுமே வாழ்ந்து வருவதாகவும் கண்ணீர் வடிக்கின்றனர். யுத்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட இவர்கள், தொடர்ந்து மீட்சியின்றி, இவ்வாறான பல நெருக்கடிகளையும் உள நெருக்கீடுகளையும் எதிர்நோக்குகின்றனர்.

அன்றாடம் கூலித் தொழில் செய்து வாழ்க்கையைக் கொண்டுநடத்தும் இவர்கள், கொரோனாவின் கோரதாண்டவம் காரணமாக, தொழில் இன்றி பட்டினியாக, சிறு பிள்ளைகளுடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அங்கலாய்க்கின்றனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில், 90 குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டம், ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடை நடுவே கைவிடப்பட்டு, வீடுகள் தேடுவாரற்ற நிலையில் உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்வாதாரத்தைக் கழித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு தேவையான அத்தனை வசதிகளையும் உரிய அதிகாரிகள் செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

-ஹஸ்பர் ஏ ஹலீம்

Lk Newspapers
Viber Community

தல அஜித்தின்

# அடுத்த லெவல்

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக இருக்கும் தல அஜித், அண்மை காலமாக துப்பாக்கி சுடுதல் போட்டியில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற 46ஆவது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் போட்டியில் அஜித் கலந்து கொண்டு, 6 பதக்கங்களை வென்று அசத்தினார்.

அடுத்ததாக தேசிய அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்கேற்க உள்ளார். இந்தப் போட்டி வருகிற செப்டம்பர் மாதம் நடைபெற உள்ளதுடன், இதற்காக படப்பிடிப்பு இல்லாத சமயங்களில், தீவிரமாக பயிற்சி எடுத்து வருகிறார் அஜித்.

தல அஜித் தேசிய அளவிலான போட்டியிலும் நிச்சயம் பதக்கம் வெல்வார் என்ற நம்பிக்கையுடன் அவருடைய ரசிகர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.





# மனம் திறந்த நயன்தாரா

சமூக வலைத்தளத்தில் கணக்குகள் தொடங்காதது ஏன் என்பது குறித்து நடிகை நயன்தாரா தொலைக்காட்சி பேட்டியில் விளக்கமளித்துள்ளார்.


தான் அடிப்படையில் ஒரு தனிமையை விரும்பும் நபர் என்றும், தன்னுடைய தனிப்பட்ட விஷயங்களை மற்றவர்களுக்கு பகிர்வது என்பது இயல்பிலேயே வராது என்றும் அதனால் தான் சமூக வலைதளங்களில் கணக்குகள் தொடங்காமல் உள்தாக அவர் கூறினார்.

அதே நேரத்தில் சமூக வலைதளங்களை அவ்வப்போது நேரம் கிடைக்கும் போது பார்ப்பதாக கூறிய நயன்தாரா, சமூக வலைதளம் என்பது ஒரு மிகப்பெரிய தளம் என்றும் அதை முழுக்க முழுக்க நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தினால் இன்னும் மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடையும் என்றும் தெரிவித்தார்.

ஆனால், அதில் ஒரு சிலர் தவறான கருத்துகளை பதிவு செய்து வருகின்றதாக கூறிய அவர், அவர்கள் அதை மட்டும் தவிர்த்தால் நல்லது என்று குறிப்பிட்டார்.

பரபரப்பைக் கிளப்பிய

# கண்ணகி



கர்ப்பமாக இருக்கும் பெண்களின் தொப்புள் கொடியை தீ வைக்கும் கண்ணகி திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகியுள்ளது.

தயாரிப்பாளராகவும் நடிகராகவும் வலம் வரும் அருண் பாண்டியனின் மூத்த மகளான கீர்த்தி பாண்டியன் சிம்பா என்ற திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார். தொடர்ந்து தன்னுடைய அப்பாவுடன் இணைந்து அன்பிற்கினியாள் என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார்.

இதனையடுத்து தற்போது கண்ணகி என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் கீர்த்தி பாண்டியன் வயிற்றில் தொப்புள் கொடியில் ஒருவர் தீ வைப்பது போல கண்ணகி திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இது போஸ்டர் மூலம் திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# பரபரப்பான பூமிகா

தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகிகளில் ஒருவரான நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் கடைசியாக வெளிவந்த திரைப்படம் திட்டம் இரண்டு. தற்போது ஐஸ்வர்யா ராஜேஷின் அடுத்த திரைப்படமான பூமிகா இன்னும் சில தினங்களில் வெளியாகவுள்ளது.

இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பெஞ்ச் தயாரிப்பில் உருவாகி இருக்கும் பூமிகா திரைப்படத்தை இயக்குனர் ரதீந்திரன் ஆர் பிரசாத் இயக்கியுள்ளார்.



பூமிகா திரைப்படத்தில் நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் உடன் இணைந்து நடிகை அவந்திகா மற்றும் நடிகர் பாவல் நவகீதன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

பூமிகா திரைப்படம் வருகிற 22ஆம் திகதி தொலைக்காட்சியில் நேரடியாக வெளியாக உள்ளதுடன், நேரடியாக ஓடிடி தளத்தில் 23ஆம் திகதி வெளியாக உள்ளது. இந்த நிலையில், இதனை அறிவிக்கும் விதமாக புதிய ட்ரைலர் நேற்று (16) வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புஷ்பாவுக்கு கடும் போட்டி



அல்லு அர்ஜுன் நடித்த 'புஷ்பா'திரைப்படத்தின் முதல் பாகத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து விரைவில் வெளியாகவுள்ளது.

இந்த திரைப்படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்ற நிலையில் தமிழக வெளியீட்டு உரிமையை வாங்க பல விநியோகஸ்தர்கள் போட்டி போட்டு வருவதாகவும் கூறப்படுகிறது

இந்த நிலையில் 'புஷ்பா' திரைப்படத்தின் வெளியீட்டுக்கு முன்னரே அதன் இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளதாகவும் அதற்கான ஆரம்பகட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில், ஜெகபதிபாபு, பிரகாஷ்ராஜ், ஹரிஷ் உத்தமன், வெண்ணிலா கிஷோர் உள்பட பலர் நடித்துள்ள இந்தத் திரைப்படத்துக்கு தேவிஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லி

ராகுல் காந்தியின்

# பிரதமர் கனவுக்கு மம்தா ஆப்பு

காங்கிரஸ் எம்.பி ராகுலின் பிரதமர் கனவுக்கு மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா குறுக்கே நிற்பதால், அவரை ஓரங்கட்டும் முயற்சியில் ராகுல் இறங்கி இருப்பதாக டெல்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 2024 லோக்சபா தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் பாரதிய ஜனதாவுக்கு எதிராக ஓரணியில் திரட்டும் முயற்சியில் மேற்கு வங்க முதலமைச்சரும், திரிணமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி ஈடுபட்டுள்ளார். இதையொட்டி ஐந்து நாள் பயணமாக சமீபத்தில் புதுடெல்லிக்கு வந்தார். அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியா, ராகுல் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். எதிர்க்கட்சியான காங்கிரஸின் செயற்பாடு மேலும் வலுவாக இருக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சிகளுடன் ஒன்று சேர்ந்து செயற்படும்படியும் சோனியாவிடம் அவர் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது.

மம்தாவுடனான சந்திப்பைத் தொடர்ந்தே, எதிர்க்கட்சி தலைவர்களுடனான காலை உணவு சந்திப்புக் கூட்டத்துக்கு ராகுல் ஏற்பாடு செய்ததாக கூறப்படுகிறது. மேலும், பா.ஜ.கவுக்கு எதிராக அணி



திரட்டும் முயற்சி, காங்கிரஸ் வாயிலாக நடக்க வேண்டும் என, ராகுல் நினைப்பதாக கூறப்படுகிறது. எனவேதான் மம்தாவின் முயற்சியில் அவர் அதிகம் ஆர்வம் காட்டாமல் விலகி நிற்பதாகவும் தெரிகிறது.

இதற்கிடையே எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் மம்தாவின் முயற்சி, ராகுலின் பிரதமர் கனவுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் பார்க்கப்படுகிறது. எனவே, மம்தாவை எரிச்சல் அடையச் செய்ய, மார்க்சிஸ்ட் கம்யூஸ்டுடன் காங்கிரஸ் நெருக்கம் காட்ட ஆரம்பித்துள்ளதாக புதுடெல்லி வட்டாரங்கள் கிசுகிசுக்கின்றன.

தஞ்சாவூர்

# உறவின் அர்த்தம் 'ஆனந்தம்'?



தஞ்சாவூரில், ஆதரவற்றோர் விடுதியில் இரண்டு வாரத்துக்கு பின், அக்காவை பார்த்த ஆனந்தத்தில் தம்பி கண்ணீர் விட்டு அழுதது, நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

தஞ்சாவூரிலுள்ள அரசாங்க ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்தில், மாணவர்கள் தனியாகவும், மாணவியர் தனியாகவும் விடுதிகளில் தங்கி பயின்று வருகின்றனர். கொரோனா ஊரடங்கால் பாடசாலைகள் திறக்கப்படாமல், விடுதியில் முடங்கி கிடப்பவர்களின் மன அழுத்தத்தை போக்கும் விதமாக, சுதந்திர தினத்தை முன்னிட்டு, நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர், மாணவர்கள் மத்தியில் நகைச்சுவையாக பேசியும், பாட்டுப் பாடியும் மகிழ்வித்தார். இதற்காக, மாணவ - மாணவியர் ஒரே இடத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அப்போது, அரவிந்தன், (வயது 14) என்ற மாணவன் அழுது கொண்டிருந்தான். ஆசிரியர்கள் விசாரித்தபோது, "என் அக்கா மீனா (வயது 15), என்னை பார்த்து இரண்டு வாரம் ஆகி விட்டது. அவளை பார்க்க வேண்டும்" என்றான். இதையடுத்து, ஆசிரியர்கள், அரவிந்தனை மீனா அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் அமர வைத்தனர். பல நாள்களுக்குப் பின் அக்காவை பார்த்ததும், அரவிந்தன் தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தான். அவனை அழ வேண்டாம் எனக் கூறி மீனா சமாதானம் செய்தார்.


இராமநாதபுரம்

# கண்டால் சொல்லுங்கள்

இராமநாதபுரம், கேணிக்கரையைச் சேர்ந்த கோழிக்கடை வியாபாரி, பறவைகள் ஆர்வலராவார். இவர் தனது வீட்டில் ஏராளமான கிளிகளை வளர்த்து வருகிறார். இவர் அண்மையில், சென்னைக்கு சென்றபோது, 10 நாள்களான அபூர்வ பெண் கிளி ஒன்றினை ரூ.40 ஆயிரம் விலை கொடுத்து வாங்கி வந்துள்ளார்.

'கிரிம்சன் பெல்லீட் கண்ணூர்' என்ற வகையைச் சேர்ந்த இந்தக் கிளியை கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக வளர்த்து வந்துள்ளார். பல கிளிகள் வளர்த்து வந்தாலும் இந்தக் கிளி மீது அளவு கடந்த பாசமும் பரிவும் காட்டி வந்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த 4 நாள்களுக்கு முன்னர், வீட்டில் வழக்கம்போல காலையில் குளிப்பதற்காக கூண்டில் இருந்து திறந்து விட்டுள்ளனர். அப்போது சுற்றித் திரிந்து விளையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரென்று காணாமல் போனது. இதனால் பதறியடித்து அங்கும் இங்கும் கிரீனி கிளியை தேடினர். ஆனால் எங்கும் கிளி கிடைக்கவில்லை. இதனால் குடும்பமே சோகத்தில் மூழ்கியது. எங்காவது சென்றிருக்கும் வந்துவிடும் என்று காத்திருந்த நிலையில் 3 நாள்களாகியும் வரவில்லை.



தஞ்சாவூர்

# தேக்கு குச்சியை அகற்றிய டொக்டர்கள்

ஆட்டுக் குட்டிக்கு குழை பறிக்க முயன்ற போது தவறி விழுந்த, 11 வயது சிறுவனின் தொடையில் தேக்குக் குச்சியொன்று ஏறியது.

உடனடியாக தஞ்சாவூர் அரசாங்க மருத்துவமனைக்கு கொண்டு சென்று, அங்குள்ள டொக்டர்களால் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 30 நிமிட சத்திர சிகிச்சையின் பின்னர் டொக்டர்கள் வெற்றிகரமாக குச்சியை அகற்றியுள்ளனர்.

அரியலூரர் மாவட்டம், வானதிரையன் பட்டினத்தைச் சேர்ந்த



சிறுவன், ஆறாம் வகுப்பில் படித்து வருகின்றான். தங்கள் வீட்டில் வளர்க்கும் ஆட்டுக் குட்டிகளுக்கு குழை பறிக்க, வீட்டின் அருகே இருந்த தேக்கு மரத்தில் ஏறிய போது, தவறி கீழே விழுந்தார். அப்போது, அருகில் இருந்த மற்றொரு தேக்கு மரத்தின் கிளை குச்சி, சிறுவனின் தொடையில் குத்தி, மறுபக்கம் வெளியே வந்தது. சிறுவன், வலியில் அலறி துடித்துள்ளான்.

சிறுவனின் தாயார் மற்றும் அருகில் இருந்தவர்கள், மரத்தோடு இருந்த குச்சியை அறுத்து எடுத்து, தஞ்சாவூர் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு சிறுவனுக்கு டொக்டர்கள் சத்திர சிகிச்சை செய்து, 30 நிமிடங்களில் குச்சியை அகற்றினர். தற்போது, சிறுவன் குணமடைந்து, வீடு திரும்பி உள்ளார்.

புதுடெல்லி

ராஜ்யசபாவில் தள்ளுமுள்ளு

# எதிர்க்கட்சியினர் வெளியேற்றப்பட்டனர்

ராஜ்யசபாவில் நடந்த பெரும் அமளி காரணமாக பல எதிர்க்கட்சி எம்.பிக்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் பலர் தள்ளுமுள்ளுவில் ஈடுபட்டதால், அவைத் தலைவர் காவலர்களிடம் அவர்களை அவையில் இருந்து வெளியேற்ற உத்தரவிட்டார். இதனை அடுத்து ராஜ்யசபா தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு 7 யூனியன் அமைச்சர்கள் கடிதம் ஒன்றை அளித்துள்ளனர்.

பியூஸ் கோயல், பிரகலாத் ஜோஷி, முக்தார் அப்பாஸ் நக்வி, தர்மேந்திர பிரதான், பூபேந்திர யாதவ், அர்ஜுன் ராம் மேக்வால், பி. முரளிதரன் ஆகிய ஏழு யூனியன் அமைச்சர்களும் வெங்கையா நாயுடுவை சந்தித்துப் பேசினர்.

முன்னதாக அரசாங்க முதலீட்டாளர்கள் இடையே அதிக அளவு தனியார் முதலீட்டாளர்கள் பங்கு கொள்ள அனுமதி அளிக்கும் சட்டமூலம் ராஜ்யசபாவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல எதிர்ப்பு தெரிவித்தன.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ஆளுங்கட்சி எம்பிகள் மறுத்துள்ளனர். மேலும் பெண் காவலர்கள் பலரை, பெண் எம்பிக்கள் தாக்கியதாக மத்திய அரசாங்கம் சார்பில்



தெரிவிக்கப்பட்டுள்ளது. சபை நாகரிகம் இன்றி ராஜ்யசபாவில் தள்ளுமுள்ளு, வாய்த் தகராறில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் மீது நடவடிக்கை எடுக்க ராஜ சபா தலைவர் வெங்கையா நாயுடுவுக்கு ஏழு யூனியன் அமைச்சர்கள் இந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

LK Newspapers Viber Community

ஆப்கானிஸ்தான்




காபூலிலிருந்து ஜனாதிபதி, இராஜதந்திரிகள் வெளியேற்றம்:

# போருக்கு முற்றுப்புள்ளி வைத்தது தலிபான்

ஆப்கானிஸ்தானில் போர் முடிவடைந்து விட்டதாக தலிபான்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள ஜனாதிபதி மாளிகையின் கட்டுப்பாட்டை எடுத்த பின்னரே இவ்வாறு தலிபான்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், தமது பிரஜைகளை வெளியேற்ற மேற்குலக நாடுகள் நேற்றுத் தடுமாறிய வண்ணம் உள்ளன.

ஆப்கானிஸ்தானியர்கள் வெளியேற முயல்கையில் விமான நிலையத்தில் குழப்பம் நிலவுகையிலேயே மேற்குலக நாடுகளின் இந்நடவடிக்கை அமைந்துள்ளது.

ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி அஷ்ரஃப் கானி, ஆப்கானிஸ்தானை விட்டு நேற்று முன்தினம் வெளியேறியிருந்தார். எதிர்ப்பில்லாமல் தலிபான்கள் காபூலுக்குள் நுழைந்த நிலையிலேயே ஜனாதிபதி கானி வெளியேறியிருந்தார்.

இரத்தக்களரியை தவிர்க்க விரும்புவதாகத் தெரிவித்தே ஜனாதிபதி கானி வெளியேறியிருந்தார்.

இந்நிலையில், வெளிநாட்டுப் படைகள் வெளியேறும் வரைக்கும் புதிய ஆட்சி அமைப்புக்காக தலிபான்கள் காத்திருப்பர் என தலிபான் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மத்திய காபூலில் நேற்று வீதிகள் வெறுமையாகக் காணப்பட்டிருந்தன.

இதேவேளை, தூதுவர் றொஸ் வில்சன் உட்பட அனைத்து தூதரக அதிகாரிகளும் காபூல் விமான நிலையத்துக்கு மாற்றப்பட்டதாக ஐ. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹெய்ட்டி



நிலநடுக்கத்தால்

## உயிரிழந்தோர் தொகை 1,297ஆக உயர்வு

ஹெய்ட்டியில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 1,297ஆக உயர்ந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட குறித்த நிலநடுக்கத்தால் 5,700 பேர் காயமடைந்த நிலையில் ஹெய்ட்டி வைத்தியசாலைகள் நேற்று முன்தினம் நிறைந்திருந்தன.

இந்நிலையில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அந்தவகையில், ஹெய்ட்டியின் அயல் நாடுகளான டொமினிக் குடியரசும், மெக்ஸிக்கோவும் உணவையும், மருந்துகளையும் விமானம், தரை மூலம் அனுப்பிய நிலையில், தேடுதல் மற்றும் மீட்புப் படையினரை கொலம்பியா அனுப்பியிருந்தது.

இதேவேளை, ஐக்கிய அமெரிக்காவும் தேடுதல் மற்றும் மீட்பு அணியை அனுப்பியுள்ளது.

கனடா

இடைத் தேர்தலுக்கு

## அழைப்பு விடுத்த ட்ரூடோ



கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இடைத் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் ட்ரூடோவின் சிறுபான்மை லிபரல் அரசாங்கமானது பெரும்பான்மையை எட்டும் வீச்சத்தில் உள்ளதாக கருத்துக்கணிப்புகள் இனங்காட்டுகின்ற நிலையிலேயே பொதுத் தேர்தல் இடம்பெறவுள்ளது.


தாங்கள் எவ்வாறு கொரோனா வைரஸுக்கு எதிரான யுத்தத்தை முடிக்கின்றோம் என கனேடியர்கள் தெரிவு செய்ய வேண்டும் என பிரதமர் ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், திட்டமிடப்பட்டதற்கு இரண்டு ஆண்டுகள் முன்பதாக அடுத்த மாதம் 20ஆம் திகதி கனேடியர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கனடாவின் தலைவரான மகாராணியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் மேரி சிமோனிடம் நேற்று முன்தினம் சென்ற பிரதமர் ட்ரூடோ, பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரினார்.

மலேஷியா

## இராஜினாமா செய்தார் பிரதமர் முஹிட்டீன்



மலேஷியப் பிரதமர் முஹிட்டின் யஸினும், அவரது அமைச்சரவையும் 17 மாதங்களில் அதிகாரத்தில் இருந்த பின்னர் இராஜினாமா செய்துள்ளனர்.

பிரதமர் முஹிட்டினின் கூட்டணிக்குள் மோதல், கொரோனா வைரஸ் அலை மீள அதிகரிக்கையிலேயே இது நிகழ்ந்துள்ளது.

கடைசி அமைச்சரவைக் கூட்டத்தை நேற்றுக் காலையில் நடாத்திய முஹிட்டின், அரச மாளிகைக்குச் சென்று தனது இராஜினாமாவை மன்னரிடம் வழங்கியிருந்தார்.

பலஸ்தீனம்



இஸ்ரேலியப் படைகளால்

## பலஸ்தீனர் நால்வர் கொலை

### மேற்குக் கரையில் மோதல்

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், தேடுதல் ஒன்றில் பலஸ்தீன துப்பாக்கிதாரிகளுடன் துப்பாக்கிப் பிரயோகத்தை இஸ்ரேலியப் படைகள் நேற்று மேமற்கொண்டதாக இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறைந்தது நான்கு பலஸ்தீனர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜெனின் நகரத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்: நடப்பு

# சம்பியன்கள் வீழ்ந்தன



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோல்வியடைந்தது.

டொட்டென்ஹாமின் சண் ஹெயுங் மின் பெற்ற கோலோடு 1-0 என்ற கோல் கணக்கில் சிற்றியை டொட்டென்ஹாம் வீழ்த்தியிருந்தது.

இந்நிலையில், சிற்றிக்கு நகர்வார் என எதிர்பார்க்கப்படும் டொட்டென்ஹாமின் ஹரி கேன், இப்போட்டியில் விளையாடியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், அரங்கத்தில் "நீங்கள் பார்க்கிறீர்களா ஹரி கேன்" என்ற கோஷம் ஒலித்திருந்தது.

சிற்றியின் கெவின் டி ப்ரூனே, ஒலெக்ஸான்டர் ஸின்சென்கோ, கப்ரியல் ஜெஸுஸ் ஆகியோர் இறுதி 20 நிமிடங்களிலேயே களமிறக்கப்பட்டதோடு, கைல் வோக்கர், ஜோன் ஸ்டோன்ஸ், அய்மெரிக் லபோர்ட்டே, றொட்றி, பேர்னார்டோ சில்வா ஆகியோர் களமிறங்கியிருக்கவில்லை.



புத்தளத்தில் பாரம்பரிய

## விளையாட்டு போட்டிகள்

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் ரிக்லா விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த மாட்டு வண்டில் போட்டிகளின் இறுதிப் போட்டியானது, புத்தளம் இஜ்திமா மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

புத்தளத்தில் பாரம்பரியமாக இந்த விளையாட்டுப் போட்டிகள் நூற்றாண்டு காலத்துக்கும் மேலாக தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒரு மாத காலமாக தெரிவு போட்டிகள் நடைபெற்று இறுதிப் போட்டிள் நடைபெற்று முடிந்தன.

அரை கரத்தை, ரேஸ் கரத்தை மற்றும் திறந்த போட்டிகள் என்பன செவ்வனே நடந்தேறின. போட்டிக்கு பிரதம நடுவராக எம்.யூ.எம்.வஸீம் கடமையாற்றினார்.

அரை கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே ரியாஸ், ஜனார்த்தன், வாரிஸ் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

ரேஸ் கரத்தை போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே இஸ்மி, வாரிஸ், நாஸிக் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

திறந்த போட்டியில் முதலாம் இடத்தை இஸ்காரும், இரண்டாமிடத்தை ரபீக்கும், மூன்றாமிடத்தை இஸ்மியும் பெற்றுக் கொண்டனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் நகராதிபதி எம்.எஸ்.எம். ரபீக் கலந்து கொண்டார்.

புத்தளம் நகர சபை உறுப்பினர்களான பீ.எம்.ரனீஸ், ஏ.எம். சிஹான் உள்ளிட்ட அனுசரணையாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.



இங்கிலாந்து எதிர் இரண்டாவது டெஸ்டில்

## முன்னிலையில் இந்தியா

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில், லோர்ட்ஸில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த குறித்த டெஸ்டின் நேற்று முன்தின நான்காம் நாள் முடிவிலேயே இந்தியா முன்னிலையிலுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 364/10 (துடுப்பாட்டம்: லோகேஷ் ராகுல் 129, ரோஹித் ஷர்மா 83, விராட் கோலி 42, இரவீந்திர ஜடேஜா 40, றிஷப் பண்ட் 37 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேம்ஸ் அன்டர்சன் 5/62, ஒலி றொபின்சன் 2/73, மார்க் வூட் 2/91, மொயின் அலி 1/53)

முதலாவது டெஸ்டில்

## பாகிஸ்தானை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டை மேற்கிந்தியத் தீவுகள் வென்றுள்ளது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், ஜமைக்காவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இப்போட்டியில் ஒரு விக்கெட்டால் மேற்கிந்தியத் தீவுகள் வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பாகிஸ்தான்: 217/10 (துடுப்பாட்டம்: பவாட் அலாம் 56, பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 3/26, ஜேய்டன் சீல்ஸ் 3/70,

மே. தீவுகள்: 253/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 97, ஜேஸன் ஹோல்டர் 58, பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/59, மொஹமட் அப்பாஸ் 3/43.

பாகிஸ்தான்: 203/10 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 55. பந்துவீச்சு: ஜேய்டன் சீல்ஸ் 5/55, கேமார் றோச் 3/30

மே. தீவுகள்: 168/9 துடுப்பாட்டம்: ஜேர்மைன் பிளக்வூட் 55, பந்துவீச்சு: ஷகீன் ஷா அஃப்ரிடி 4/50, ஹஸன் அலி 3/37, போட்டியின் நாயகன்: ஜேடன் சீல்ஸ்




## குசல் பெரேராவுக்கு கொரோனாத் தொற்று

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குசல் பெரேராவுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையின்போதே பெரேராவுக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றுக்கு உள்ளானதையடுத்து தேவையான மருத்துவ நடைமுறைகளை பெரேரா கடைப்பிடிக்கிறார்.

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான இலங்கையணியின் தலைவராக பெரேராவை தசுன் ஷானக பிரதியிட்டதோடு, இந்தியாவுக்கு எதிரான தொடரில் காயம் காரணமாக பெரேரா பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 17 ஒகஸ்ட் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.